ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ ஆகஸ்ட். 06, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 303 ❖ ரூ.10

தமிழகத்தில் எடுக்கும் முயற்சிகளில் தோல்வியுறும் பாஜகவின் கோபம்

# திமுக மீது பாயும்

## நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாம் இப்போதே தயாராகிவிட்டோம். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 40-க்கு 40 இடங்களையும் தி.மு.க தலைமையிலான கூட்டணி கைப்பற்றும்; முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை , ஆக.6–**
**"நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழகத்தில் பாஜக எடுக்கின்ற முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்து இருக்கிறது. அதனால் கோபம் அதிகமாகும். திமுகவை நோக்கிப் பாய்வார்கள்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.**



கருணாநிதி நூற்றாண்டு விழாவை மாநிலமெங்கும் கொண்டாடுவது தொடர்பாக, திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நேற்று காணொலிக்காட்சி வாயிலாக நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், "நம்மை எல்லாம் ஆளாக்கிய தலைவர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்காகத்தான் இந்தக் கூட்டம் காணொலி மூலமாக கூட்டப்பட்டிருக்கிறது. திமுகசார்பில் நடத்தப்பட வேண்டிய நிகழ்ச்சிகளின் விவரங்களை கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா உங்களிடம் விளக்கினார். மாவட்டச் செயலாளர்களும், அணிகளின் செயலாளர்களும் இணைந்து நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை, அவருக்குப்புகழ்சேர்க்கும் விழாவாக, பெருமை சேர்க்கின்ற விழாவாக கொண்டாட வேண்டும். அதைவிட முக்கியமாக அவரின் கொள்கைகளை பரப்புகிற விழாவாக கொண்டாட வேண்டும். மக்கள் பயன்பெறும் விழாவாக கொண்டாட வேண்டும்.

தலைவர் கருணாநிதி நூற்றாண்டு விழா என்று சொல்கிறோம் என்றால், அதுவும் தேர்தல் பரப்புரையில் ஓர் அங்கம்தான். தலைவர் கருணாநிதி பெயரைச் சொல்லி பொதுமக்களின் கவனத்தை நம்மை நோக்கி ஈர்த்தாக வேண்டும். மக்களை ஈர்க்க கருணாநிதி காந்தம்போல் நமக்கு உதவுவார். அவரால் பயன்பெறாத தரப்பினரே இல்லை. அதனால், அந்த அடிப்படையில் கொள்கை விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாம் இப்போதே தயாராகிவிட்டோம். வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 40-க்கு 40 இடங்களையும் தி.மு.க தலைமையிலான கூட்டணி கைப்பற்றும் வகையில் நம்முடைய பரப்புரையை தொடங்கியிருக்கிறோம். அதன் ஒரு பகுதியாக, வாக்குச்சாவடிதோறும் களப்பணியாற்றும் வகையில் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

முதல்கட்டமாக, டெல்டா மாவட்டங்களுக்கான வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தை திருச்சியில் வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம். அது, அந்த மாவட்டச் செயல்வீரர்களுக்கு மட்டுமல்ல, எல்லோரையுமே உற்சாகப்படுத்தும் வகையில் இருந்தது. வரும் 17-ம் தேதி தென் மண்டல மாவட்டங்களுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டம் ராமநாதபுரத்தில் நடைபெற இருக்கிறது. தென் மாவட்டங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களின் கூட்டங்களை நடத்தி அவர்களை அழைத்து வருவதற்கான பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும்.

இன்னொன்று ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான பாசறைக் கூட்டங்களை நடத்துவதோடு நம்முடைய வேலை முடிந்துவிடாது. வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கான பரப்புரையின் தொடக்கம் மட்டும்தான் அது. அதனால், நாடாளுமன்றத் தேர்தலுக்கான அடுத்தக்கட்ட பணிகளையும் தொடங்க வேண்டும். கட்சியின் சாதனைகள் மற்றும் திமுக அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கான கருவியாக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் செயல்பட வேண்டும். ஒவ்வொரு நூறு வாக்காளருக்கும் ஒரு பொறுப்பாளர் என்று வாக்குச்சாவடி குழு உறுப்பினர் (BLC) நியமனம் செய்கிற பணிகளும் எல்லா மாவட்டங்களிலும் நிறைவடைந்திருக்கிறது.

வாக்குச்சாவடி பொறுப்பாளர்களை போலவே, எல்லா வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களையும் தலைமைக்கழகத்திலிருந்து அழைத்து சரிபார்க்கிற பணியை மேற்கொள்ளச் சொல்லியிருக்கிறேன். சரிபார்ப்புக்குப் பின், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களில் (BLC) ஏதாவது மாற்றங்கள் இருந்தால் அதையும் செய்து முடித்து, எல்லா வாக்குச்சாவடிகளிலும் BLA2, BLC பணிகளை முழுமையாக முடித்து அவங்களுக்கான அடுத்தடுத்த பணிகளை தொடங்க வேண்டும்.

பாஜகவை பொறுத்தவரையில் இது அவர்களுக்கு வாழ்வா, சாவா என்ற தேர்தல். மீண்டும் ஆட்சியை பிடிக்க எதையும் செய்வார்கள். தமிழகத்தில் அவர்கள் எடுக்கின்ற முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்து இருக்கிறது. அதனால் கோபம் அதிகமாகும். நம்மை நோக்கிப் பாய்வார்கள். கடந்த காலங்களில், இதுமாதிரி பலதடைகளை சமாளித்துத்தான் நம்முடைய கழகம் வெற்றிபெற்று இருக்கிறது. இந்த முறையும் நாம் முழுமையான வெற்றியைப் பெற வேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# "மணிப்பூர் விவகாரத்தில் எதிர்கட்சிகள் அரசியல் செய்கின்றன"

## மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றச்சாட்டு

**திருநெல்வேலி , ஆக.6–**
**"மணிப்பூர் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை. இதில் சர்ச்சையை ஏற்படுத்துவதையே நோக்கமாக கொண்டு அரசியல் செய்கிறார்கள்" என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.**



தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அடிக்கல் நாட்டும் விழாவில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய நிர்மலா சீதாராமன், "ஆதிச்சநல்லூர் உட்பட நாட்டிலுள்ள 5 இடங்களில் அருங்காட்சியகம் அமைக்க மத்திய அரசு ரூ.2500 கோடி ஒதுக்கியுள்ளது. வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட சிலைகளை மீட்க பிரதமர் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அவர் வெளிநாடுகளுக்கு செல்லும்போதெல்லாம் அந்தந்த நாடுகளை சேர்ந்த தலைவர்களிடம் இது குறித்து பேசி வருகிறார்.

மணிப்பூர் விவகாரத்தில் அனைவருக்கும் பொதுவான தீர்வை எட்டுவதற்கு நாடாளுமன்றத்தில் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து அனைத்து எதிர்க்கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து பேசியிருக்கிறோம். இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க அரசு தயாராக இருக்கிறது. மத்திய உள்துறை அமைச்சர் உரிய விளக்கம் அளிப்பார் என்று தெரிவித்திருக்கிறோம். ஆனால், அதற்கு எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை.

மணிப்பூரில் நடக்கும் சம்பவங்கள் இது முதல்முறையல்ல. இதற்குமுன் பலமுறை நடைபெற்றுள்ளது. அரசியல் பேசுவதாக நினைக்கக் கூடாது. நாடாளுமன்றத்தில் அரசியல் செய்வதால் இதை நான் சொல்ல வேண்டியுள்ளது. மணிப்பூரில் 2013-ம் ஆண்டில் ஓராண்டுக்கு மேல் கலவரம் நடைபெற்றது. அம்மாநிலம் முடக்கப்பட்டிருந்தது. கிராமங்களுக்கு மருந்து பொருட்கள், சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கொண்டு செல்லமுடியவில்லை. அந்த மாதிரி நிலையில் அப்போதைய மத்திய உள்துறை அமைச்சர் அங்கு செல்லவில்லை. ஆனால், இப்போது மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மணிப்பூரில் 3 நாட்கள் முகாமிட்டு தங்கியிருந்து அங்குள்ள நிலைமைகளை பார்த்து, மக்களை சந்தித்து பேசிவிட்டு வந்துள்ளார்.

அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார். ஆனால், பிரதமர்தான் வரவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன. அனைத்து எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கு சென்று பார்த்து வந்துள்ளனர். அவர்கள் அங்கே என்ன பார்த்தனர் என்றுகூட சொல்லத் தயாராக இல்லை. விவாதத்துக்கு வரமாட்டோம், ஆனால் கண்டிஷன் போடுவோம் என்றால் என்ன நியாயம்.

மணிப்பூர் சர்ச்சை குறித்து பேசுவதற்கு உரிய இடம் நாடாளுமன்றம். ஆனால், அங்கு நாங்கள் பேசமாட்டோம், எங்கு வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கு பேசுவோம் என்று எதிர்க்கட்சிகள் பேசிவருகின்றன. நாடாளுமன்றத்தில் யார் பதில் அளிக்க வேண்டும், எப்போது அளிக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்க் கட்சிகள் கூறுகின்றன. ஆனால் அப்படி எந்த விதிமுறைகளும் இல்லை. நாடாளுமன்றம் சுமுகமாக நடைபெறுவதில் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் பங்கு உள்ளது. ஒரு விளையாட்டு எடுத்துக்கொண்டால் இருதரப்பும் அவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்க் கட்சியினர் நினைக்கிறார்கள். நடுவராகவும் நாங்கள்தான் இருப்போம், எப்போது விளையாட வேண்டும் என்றும் நாங்கள்தான் கூறுவோம் என்று எதிர்க் கட்சிகள் கூறுகின்றன" என்று தெரிவித்தார்.

முன்னதாக, தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கும் பணிகளை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். மேலும், இந்தியாவிலேயே முதல் முதலாக அமைக்கப்பட்ட சைட் மியூசியத்தையும் திறந்து வைத்து பார்வையிட்டார்.

ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என கடந்த 2020-2021-ம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்திருந்தார். ஆதிச்சநல்லூர் பரம்பு பகுதியில் கடந்த 2021-ம் ஆண்டில் அகழாய்வு பணி தொடங்கியது. இதில் 100-க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் மற்றும் ஏராளமான பழங்கால தொல்லியல் பொருட்கள் கிடைத்துள்ளன. முதுமக்கள் தாழிகளை திறந்து அவற்றில் உள்ள பொருட்களை ஆவணப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டியதுடன், இந்தியாவிலேயே முதன் முறையாக இங்கு அமைக்கப்பட்டுள்ள சைட் மியூசியத்தையும் அவர் திறந்து வைத்தார். ஆதிச்சநல்லூரில் அகழாய்வு நடைபெற்ற 'பி' மற்றும் 'சி' சைட் பகுதியில் அகழாய்வு குழிகளுக்கு மேல் கண்ணாடி தளம் அமைத்து, அங்கு கிடைத்த பொருட்களை காட்சிப்படுத்தி மக்கள் பார்வையிட வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

விழாவில் கனிமொழி எம்.பி. பேசும்போது, "ஒவ்வொரு அகழாய்வுகளும் மிக சுவாரஸ்யமான விஷயங்களை நமக்கு சொல்லிக்கொண்டே இருக்கின்றன. மத்திய, மாநில அரசுகள், இப்பகுதி மக்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்று அனைவரும் இணைந்து ஒன்றாக செயல்பட்டு, ஊர் கூடி தேர் இழுத்து இப்போது ஆதிச்சநல்லூரில் அருங்காட்சியகம் அமைக்கும் பணி நடைபெறவுள்ளது" என்று தெரிவித்தார்.

# நள்ளிரவு சினிமா காட்சிகளுக்கு விரைவில் அனுமதி ? : அமைச்சர் தகவல்

திருப்பூர் , ஆக.6–
தமிழ்நாட்டில் ஸ்பெஷல் மற்றும் நள்ளிரவு சினிமா காட்சிகள் திரையிடும் விவகாரத்தில் விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்று செய்தித்துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.



திருப்பூரில் இடுவம்பாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர், மாணவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார். இதையடுத்து அவர் செய்தியாளர்களை சந்தித்த போது, அரசு மேல்நிலைப் பள்ளிகள், நகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் ,நிதி உதவி பெறும் பள்ளிகள், பகுதியாக உதவி பெறும் பள்ளிகள் என மொத்தம் 94 பள்ளிகள் பயன் பெறுகின்றன. 6 கோடியே 81 லட்சத்தி 42 ஆயிரத்து 620 ரூபாய் செலவில், 5,871 மாணவர்களுக்கும், 8272 மாணவிகளுக்கும் என மொத்தம் 14 ஆயிரத்து 143 மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் சார்பில், நள்ளிரவு காட்சிகள் நடத்த கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது எனவும், இதுகுறித்து முதல்வர் மற்றும் அதிகாரிகளிடம் கலந்து பேசி விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி வரவேற்புரை வழங்கினார். திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்தவராஜ் தலைமை வகித்தார். திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ், மாநகராட்சி மேயர் தினேஷ்குமார், துணை மேயர் பாலசுப்ரமணியன், திருப்பூர் மாநகராட்சி ஆணையர் பவன் குமார், 4ம் மண்டலம் தலைவர் இல பத்மநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில் கலை, இலக்கிய ஆளுமைகளுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்


புதுக்கோட்டை, ஆக.6–
புதுக்கோட்டை புத்தகத திருவிழாவில் கலை, இலக்கிய ஆளுமைகளுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று வழங்கினார். புதுக்கோட்டை புத்தகத் திருவிழா ஒன்பதாம்நாள் மாலை நிகழ்ச்சிக்கு ஆதிகாலத்து அலங்கார மாளிகை உரிமையாளர் எம்எபி.ஜெயபால் தலைமை வகித்தார். விழாவில் பங்கேற்று புதுக்கோட்டை மாவட்டத்தில் கலை, இலக்கியத்தில் வாழ்நாள் சாதனை புரிந்த ஆளுமைகளுக்கான விருதை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வழங்கி சிறப்பித்தார்.



இவ்விருதை ஞானாலயா நூலகநிறுவனர் பா.கிருஷ்ணமூர்த்தி, வரலாற்று ஆய்வாளர் ஜெ.ராஜாமுகமது, தொல்லியல் ஆய்வாளர் கரு.இராசேந்திரன், மூத்த எழுத்தாளர் செம்பை மணவாளன், மூத்த தமிழறிஞர் துரை. மதிவாணன், மூத்த எழுத்தாளர் ப.உமாபதி ஆகியோர் இவ்விருதினைப் பெற்றனர். விருது நிகழ்வை கவிஞர் ராசி. பன்னீர்செல்வம் ஒருங்கிணைத்தார்.

சுற்றுச்சூழல்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மூத்த வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், சிகரம் சதீஷ்குமார் உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக கவிஞர் ஸ்டாலின் சரவணன் வரவேற்க, ஆ.செல்வராஜ் நன்றி கூறினார். முன்னாள் எம்எல்ஏ கவிதைப்பித்தன், மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலர் இ.பானுப்பிரியா, கல்வியாளர் ஆர். சி.உதயகுமார், பிவிஆர். சேகரன், விசுகுமாறன், எம்ஏபி. மணிகண்டன், எம்.சுப்பு உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்மை நாம்
கேள்வி கேட்காதவரை..
நம் தவறுகளை
நாம் உணரபோவதில்லை...






புதுக்கோட்டை, அரசு முன் மாதிரி மேல் நிலைப் பள்ளியில், அப்பள்ளியில் பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா கலந்துகொண்டு வழங்கினார். இந்நிகழ்வில் புதுக்கோட்டை நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில், துணைத்தலைவர் லியாகத் அலி, மாவட்ட கல்வி அலுவலர் ரமேஷ், மாவட்ட கல்வி ஆய்வாளர் குரு.மாரிமுத்து சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர். முன்னதாக பள்ளி முதல்வர் பெ.சிவப்பிரகாசம் விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்றார். நினைவாக பள்ளி துணை முதல்வர் செந்தில் நன்றி கூறினார்.

## கும்பகோணத்தில் காங். மேயர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி காங்கிரஸார் போஸ்டர்




கும்பகோணம், ஆக.6- காங்கிரஸ் மேயர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கும்பகோணம் மாநகரம் முழுவதும் போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோயில் கும்பாபிஷேகம் அடுத்த ஆண்டு ஜனவரி 14-ம் தேதி நடைபெறுவதை யொட்டி, அந்த விழாவுக்கு கும்பகோணம் பகுதியிலிருந்து புனித நீர் அடங்கிய குடங்கள், கடந்த மாதம் 26-ம் தேதி அனைத்து இந்து கூட்டமைப்பு சார்பில் புறப்பட்டு சென்றது. இதில் பல்வேறு இந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்ற நிலையில், சிறப்பு விருந்தினராக சூரியனார் கோயில் வாமதேவ சந்தானம் சிவாக்கிர யோகிகள் ஆதீனம் 28-வது குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் மாநகராட்சி மேயர் க.சரவணன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிலையில், இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மேயர் க.சரவணன் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கும்பகோணம் மாநகர காங்கிரஸ் சார்பில், கும்பகோணம் முழுவதும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. இதில், காங்கிரஸ் தலைமையே நடவடிக்கை எடு என தலைப்பிட்டு, எம்மதமும், சம்மதம் என்ற காங்கிரஸ் கொள்கைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் மதவெறி ஆர்.எஸ்.எஸ். கும்பலுடன் கைகோத்து அயோத்தி ராமர் கோயிலுக்கு தீர்த்தக்குடம் சுமக்கும் விசுவாசமற்ற கும்பகோணம் மேயர் மீது காங்கிரஸ் தலைமையே நடவடிக்கை எடு என அச்சிட்டவர்களின் பெயர்களுடன் ஒட்டப்பட்டுள்ளன.

இதனால், கும்பகோணம் காங்கிரஸ் கட்சியினரிடையே கோஷ்டி பூசல் வெடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த போஸ்டரால் கும்பகோணம் மாநகரப் பகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேயர் க.சரவணன் கூறும்போது, "மேயர் என்பவர் பொதுவானவர். ஆதினம் என்னை அழைத்ததால் நான் சென்றேன். நான் ஒன்றும் ராமர் கோயிலுக்கு குட்டுவதற்கு எதிரானவர் கிடையாது. என்ன பிடிக்காத எதிர் கோஷ்டியினர் தான் இந்தச் செயலை செய்திருப்பார்கள். இது தொடர்பாகக் கட்சியின் மேலிடத்தில் புகாரளிக்கவுள்ளேன்" எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாமன்ற காங்கிரஸ் உறுப்பினர் ச.அய்யப்பன் கூறியது, "இந்த நிகழ்ச்சியில் மேயர் பங்கேற்றது தவறானதாகும். காங்கிரஸ் கட்சிக்கும், கொள்கைக்கும் எதிரானதாகும். இந்தச் செயல், இவர் பாஜகவுக்குச் செல்வதற்கான நோக்கமாகக் கூட இருக்கலாம். காங்கிரஸ் கட்சியின் அடிப்படை கொள்கையை பற்றித் தெரிந்திருந்தால் சென்றிருக்க மாட்டார். காங்கிரஸ், திமுகவினரிடம் தெரிவித்துவரும் நிலையில் இவர், அவர்களுடைய நிகழ்ச்சியில் பங்கேற்று, கட்சிக்கு புறம்பான செயலாகும். கட்சி மேலிடத்தில் புகாரளிக்கவுள்ளோம்" எனத் தெரிவித்தார்.

### "எனது கைது எதிர்பார்க்கப்பட்டதே"

# கைதுக்கு முன்பே இம்ரான் கான் வெளியிட்ட வீடியோ வைரல்



இஸ்லாமாபாத், ஆக.6- தனது கைது எதிர்பார்க்கப்பட்டதே என்றும், கட்சித் தொண்டர்கள் உறுதியான எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும் என்றும் பாகிஸ்தான் தெரீக் இ இன்சாப் கட்சியின் தலைவர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து இஸ்லாமாபாத் விசாரணை நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து இம்ரான் கான் உடனடியாக கைது செய்யப்பட்டார். மேலும், அவர் அரசியலில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எவ்வித தேர்தலிலும் போட்டியிட இயலாத வண்ணம் தகுதியிழந்துள்ளார்.

இந்நிலையில், கைது ஆவதற்கு முன் இம்ரான் கான் பேசிய வீடியோ தற்போது வெளியிடப்பட்டு வைரலாகி உள்ளது. அதில் அவர் கூறியிருப்பதாவது: "இந்த வீடியோ உங்களை வந்தடையும்போது நான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பேன். எனவே, உங்கள் அனைவருக்கும் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நீங்கள் வீட்டில் அமைதியாக அமர்ந்திருக்காதீர்கள்.

இதுவரையிலான எனது முயற்சிகள் எதுவும் எனக்கானது அல்ல. எனது மக்களுக்காக, எனது சமுதாயத்துக்காக, உங்களுக்காக. உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக. உங்கள் உரிமைக்காக நீங்கள் உறுதியாக நிற்காவிட்டால் நீங்கள் அடிமை வாழ்க்கையை வாழ நேரிடும். அடிமைகளுக்கு வாழ்க்கை என்று எதுவும் கிடையாது என்பதை மனதில் கொள்ளுங்கள்." இவ்வாறு அவர் அந்த வீடியோவில் தெரிவித்துள்ளார்.

இம்ரான் கான் 2018-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பாகிஸ்தான் பிரதமராக பதவியேற்றார். அவரது தலைமையிலான கூட்டணியிலிருந்து விலகிய முக்கியக் கட்சி ஒன்று, எதிர்க்கட்சியுடன் இணைந்தது. இதனால் நாடாளுமன்றத்தில் இம்ரான் கானுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதைத் தொடர்ந்து 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகினார். ஷெபாஸ் ஷெரீப் பிரதமராக பொறுப்பேற்றார்.

பதவி இழப்புக்குப் பிறகு இம்ரான் கான் மீது ஊழல், மோசடி, கொலை மிரட்டல் என பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இதில் கடந்த 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரை இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது அவர் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டபோது வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள், விலையுயர்ந்த பொருட்களை விற்று கிடைத்த பணத்தை மோசடி செய்ததாக ஒரு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை இஸ்லாமாபாத் விசாரணை நீதிமன்றம் விசாரித்து வந்தது. இந்நிலையில் அந்த வழக்கில் இம்ரான் கான் குற்றவாளி என்று உறுதி செய்த நீதிமன்றம் அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கியுள்ளது.

ஏற்கெனவே, இம்ரான் கான் மற்றும் அவரது மனைவிக்குச் சொந்தமான காதிர் அறக்கட்டளை மூலம் ரூ.5,000 கோடி ஊழல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது. அந்த வழக்கில் இம்ரான் கானை கைது செய்ய ஊழல் தடுப்பு ஆணையம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர் கடந்த மே மாதம் கைது செய்யப்பட்டார். பின்னர் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




### சுருக்கு மடி வலைக்கு தடை விதிக்காவிடில்

## 9 மாவட்ட மீனவர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம்- தரங்கம்பாடி கூட்டத்தில் தீர்மானம்



தரங்கம்பாடி, ஆக- 06: மயிலாடுதுறை மாவட்டத்தில் கடல் வளம் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் சுருக்குமடி வலைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனை சில கிராமங்கள் மீறுவதால் மீனவர்களிடையே மோதல் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில் சுருக்குமடி வலைக்கு முழுமையாக தடை விதிக்க வலியுறுத்தி தரங்கம்பாடியில் 9 மாவட்ட மீனவ பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அக்கரைப்பேட்டை மீனவ பஞ்சாயத்து தலைமையிலும் தரங்கம்பாடி பஞ்சாயத்தார் முன்னிலையிலும் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மயிலாடுதுறை, புதுச்சேரி, கடலூர், காரைக்கால், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருவாரூர் ஆகிய 9 மாவட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். கூட்டத்தின் முடிவில் சுருக்குமடி வலை, இரட்டை மடிவலை, அதிவேக இன்ஜின்கள் பொருத்தப்பட்ட படகுகளுக்கு முழுமையாக தடை விதிக்க வேண்டும். மாவட்ட கலெக்டர், மீன்வளத்துறை அலுவலர்கள் மூலம் இந்த கோரிக்கையை தமிழக முதல்வருக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

எதிர் வரும் 18-ஆம் தேதி ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் நடைபெற உள்ள மாநாட்டில் கலந்து கொள்ளும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒன்பது மாவட்ட மீனவ பிரதிநிதிகள் இந்த கோரிக்கை மனுவினை அளிக்க வேண்டும். தொடர்ந்து மாவட்ட கலெக்டர் மீன்வளத்துறை அதிகாரிகள் சுருக்குமடி வலைக்கு தடை விதிக்கா விட்டால் 9 மாவட்ட மீனவர்கள் ஒன்றிணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## விராலிமலை அருகே நீர்ப்பழனியில் நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கான ஆலோசனை நிகழ்ச்சி



விராலிமலை, ஆக.6- புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அருகே உள்ள நீர்ப்பழனியில் நெல் சாகுபடியில் பூச்சி நோய் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த ஆலோசனை நிகழ்ச்சி ரிலையன்ஸ் அறக்கட்டளையின் சார்பில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நெல் சாகுபடியில் மண் வள மேலாண்மை, நுண்ணூட்ட பயன்பாடு, இயற்கை வழி ஊட்டச்சத்து தயாரித்து பயன்படுத்தும் முறைகள், ஊட்டச்சத்து மேலாண்மை, பூச்சி நோய் மேலாண்மை போன்ற பல்வேறு தொழில் நுட்பங்கள் குறித்த விவசாயிகளின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு, வேளாண் வல்லுநர் கே.சி.சிவபாலன் விளக்கம் அளித்து ஆலோசனை வழங்கினார், ரிலையன்ஸ் அறக்கட்டளையின் மாவட்ட மேலாளர் இரா. அன்பழகன் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்திருந்தார், இந்நிகழ்ச்சியில் நீர்ப்பழனி பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# "நூ கலவரம் திட்டமிட்ட சதி" காரணங்களை அடுக்கி ஹரியானா உள்துறை அமைச்சர் பேட்டி



சண்டீகர், ஆக.6- குன்றுகளின் மேலிருந்து துப்பாக்கியால் சுடப்பட்டது, கட்டடிடங்களின் மேல்மாடிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட கற்கள் நூ வன்முறை முன் தீர்மானிக்கப்பட்ட ஒன்று என்பதை உணர்த்துவதாக ஹரியாணா உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

ஹரியாணா மாநில உள்துறை அமைச்சர் அனில் விஜ் அம்பாலாவில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது "நூ வன்முறை தொடர்பாக இதுவரை 202 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 80 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பாக இதுவரை 102 எஃப்ஐஆர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வன்முறையில் தொடர்புடைய யாரும் காப்பாற்றப்பட மாட்டார்கள் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

இது திட்டமிடப்பட்டு நடந்த சதி. அனைவரின் கைகளிலும் லத்தி இருந்திருக்கிறது. எங்கிருந்து அவை இலவசமாக வழங்கப்பட்டன? யாரோ சிலர் இதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். துப்பாக்கிச்சூடு சம்பவமும் நடந்திருக்கிறது. எங்கிருந்து ஆயுதங்கள் கிடைத்தன. இந்த விஷயத்தின் அடியாழம் வரை நாங்கள் ஆராயப்போகிறோம்" என்றார்.

குற்றவாளிகளின் சொத்துக்கள் மீது புல்டோசர் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டதற்கு தேவையான இடங்களில் புல்டோசர்கள் பயன்படுத்தப்படும். புல்டோசர் என்பது சிகிச்சையின் ஒரு அங்கம்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து சைபர் கிரைம் காவல்நிலையம் தாக்கப்பட்டது குறித்து பேசிய அமைச்சர், "இந்த விஷயத்தில் நாங்கள் மிகவும் தீவிரம் காட்டி வருகிறோம். காவல் நிலையத்தை தாக்கியவர்கள் யார், அவர்கள் என்னென்ன ஆவணங்களை அழிக்க முற்பட்டார்கள் என்று விசாரணை நடந்து வருகிறது. இந்தியாவின் சைபர் கிரைமின் மையமாக ஜார்கண்ட் மாநிலம் அறியப்படுகிறது. நூ இப்போது புதிய ஜம்தாராவாக மாறிவருகிறது.

ஏப்ரல் மாதத்தில், 5000 போலீஸார் நூ-வில் 14 இடங்களில் சோதனையில் ஈடுபட்டனர். அதில் பல லேப்டாப்கள், ஆயிரக்கணக்கான சிம் மற்றும் ஏடிஎம் கார்டுகள் கைப்பற்றப்பட்டு அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இப்போது சைபர் க்ரைம் காவல் நிலையம் தாக்கப்பட்டுள்ளது. சைபர் குண்டர்கள் காவல் நிலையத்தை தாக்கி அங்குள்ள கணினிகளை சேதப்படுத்தி ஆவணங்களை அழிக்க முயன்றனரா என்ற விசாரணை தொடங்கியுள்ளது.


போலீசார் பொதுமக்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தும். சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தும் வருகின்றனர். கலவரம் தொடங்கிய திங்கள் கிழமை அந்த ஊர்வலத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் தங்களிடம் உள்ள வீடியோக்கள் மற்றும் தகவல்களை போலீஸாருக்கு கொடுத்து உதவுமாறு நான் வேண்டுகிறேன். அதே கோரிக்கையை கலவரத்தின் போது அங்கு இருந்த மக்களிடமும் வைக்கிறேன் என்றார்.

மேலும், விஎச்பி ஊர்வலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல் குறித்து அதிகாரிகளுக்கு உளவுத்துறை தகவல் அளித்தது என்று சில காட்சி ஊடகங்களில் காட்டப்பட்டது என்று அமைச்சரிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு, என்ன மாதிரியான தகவல்கள் கொடுக்கப்பட்டன, யார் அதைப் பற்றி கூறினார்கள். இந்த விஷயங்கள் எல்லாம் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

பசுக் காவலர் மோனு மானேசரை கைது செய்ய ஹரியாணா அரசு ஒத்துழைக்கவில்லை என்ற ராஜஸ்தான் அரசின் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர், " வெளியிடுவதில் காங்கிரஸ் முதல்வர்கள் பெயர் பெற்றவர்கள். நாடுமுழுவதும் அவர்கள் பொறுப்பற்ற தன்மையில் பேசி வருகிறார்கள். அவர்கள் வந்து மோனு மானேசரை வந்து கைது செய்யவேண்டியது தானே.. யார் அவர்களை தடுத்தது. ஹரியாணா போலீஸாரும் பிற மாநிலங்களுக்கு குற்றவாளிகளைதேடிசெய்ய செல்கிறார்கள். எல்லோரும் ஒத்துழைக்கிறார்கள். நாங்களும் ஒத்துழைக்கிறோம்" என்றார்.

முன்னதாக, ஹரியாணா மாநிலம் நூ மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை விஸ்வ இந்து பரிஷத் ஊர்வலத்தை தடுக்க முயன்றதால் ஏற்பட்ட மோதல், கலவரமாக மாறி, பக்கத்து மாவட்டங்களுக்கும் பரவியது. இதில் ஊர்க்காவல் படையைச் சேர்ந்த இருவர் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். வாகனங்கள், கடைகள், உணவகங்கள் உள்ளிட்ட சொத்துகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இந்தக் கலவரம் குருகிராம் வரை பரவியது குறிப்பிடத்தக்கது.

## அணைக்கட்டு அரசினர் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டது



செய்யூர்:ஆக-6 செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட அணைக்கட்டு அரசினர் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டியை செய்யூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பனையூர். மு. பாபு முன்னிலையில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

உடன் இலத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ். இராமச்சந்திரன் மற்றும் ஒன்றிய கவுன்சிலர் சுஜாதா பாரதி பாபு கலந்துகொண்டனர்.

இதில் பள்ளியின் தலைமை ஆசிரியர் (பொ) ஜெ.சக்திவேல் தலைமை தாங்கினார் மற்றும் அப்பள்ளி ஆசிரியர்கள் இ. மணிகண்டன் (வணிகவியல்) ஆசிரியர் ஏ.சுந்தரவடிவழகன் பொருளாதார ஆசிரியர் ஆகியோர் உளிருந்தபள்ளி மாணவ மாணவர்களுடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காரைக்கால் ஆட்சியரிடம் விடுப்பட்டு போன விவசாயிகளுக்கு

# காப்பீடு தொகையை பெற்று தர விவசாயி சங்க நிர்வாகிகள் கோரிக்கை

காரைக்கால்,ஆக, 6

காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் சங்க நிறுவாகிகள் மாவட்ட ஆட்சிதலைவர். பொதுப்பணிதுறை செயற்பொறியாளர் (நீர்பாசனம் ). மற்றும் இணை இயக்குனர் வேளாண்மை துறை ஆகியோரை சங்கத்தலைவர் பொன். ராஜேந்திரன் தலைமையில் மரியாதை நிமித்தமாகசந்தித்தனர்.



அப்பொழுது ஆட்சிதலைவர் குலோத்துங்கனிடம் விட்டு விட்டு பெய்த கோடை மழையால் சகுப்படி செய்தபருத்தியில் பூச்சிக்ளால் மிக பெரிய பாதிப்பு ஏற்பட்டு மகசூல் குறைந்ததையும் . பருத்தி உரிய விலை கிடைக்கததால் விவசாயிகளின் பொருளாதாரம் கேள்விக்கு உள்ளகி இருப்பதால் இந்த ஆண்டு பருத்திக்கு உரிய பயிர் காப்பீடு பெற்று தரவும்.2020--2021 ஆண்டுக்கு உரிய காப்பீட்டில் விடுப்பட்டு போன 447விவசாயிகளுக்கு காப்பீடு தொகையை பெற்று தரவும். விவசாயிகளுக்கு தள்ளுபடிசெய்ய பட்ட தொடக்க வேளாண்மை சங்க கடனுக்கு உரிய தொகைகளை சங்கக்களுக்கு வரவு வைத்து கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிக்களுக்கு இந்த ஆண்டு விவசாய கடன் கொடுத்தால் மட்டுமே வரும் பருவத்தில் பயிர் செய்ய முடியும் என்பதால்விரைந்து நடவடிக்கை ஏடுத்து விவசாய கடன் கொடுக்கவும் கோரிக்கை வைக்க பட்டது.கோரிக்கையை ஆட்சித்தலைவர் உரிய நடவடிக்கை எடுப்பதாகஉறுதி கூறினார்.

சந்திப்பின் பொழுது சங்க செயலாளர் நாராயணன்.பொருளார் சண்முகநாதன்.துணை செயலாளர்சோமு செய்தி தொடர்பாளர் செல்வகணபதி மற்றும் செயற்குழுஉறுப்பினர்கள் ஆறுமுகம்.ஞானசேகரன். ஆரோக்கியதாஸ். அருணாசலம் நூர் முகமது ஆகியோர் உடன் இருந்தனர்..



காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு புதியதாக .ஒ.என்.ஜி.சி பங்களிப்புடன் ரூபாய் 17 இலட்சம் மதிப்பீட்டில் எக்கோ கார்டியோ கிராம் இயந்திரம் புதியதாக நிருவப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் நேற்று திறந்து வைத்தார். மேலும் அரசு பொது மருத்துவமனையின் முதல் மாடியில் பாலூட்டும் தாய்மார்களுக்கு பயன்பெறும் வகையில் தனிஅறை அமைக்கப்பட்டு அதையும் நேற்று பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். கண்ணகி மற்றும் உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி டாக்டர். மதன்பாபு மேலும் நல்வழித்துறை துணை இயக்குனர் டாக்டர். சிவராஜ் குமார் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# சென்னையில் கேரிங் ஹார்ட்ஸ் பவுன்டேஷன் சார்பில் மாணவர்களுக்கு கருத்தரங்கம் நடைபெற்றது

சென்னை,ஆக,6

சென்னைசாந்தோமில் அமைந்துள்ள தனியார் பள்ளிவளாகத்தில்கேரிங் ஹார்ட் பவுண்டேஷன் சார்பில் பிளஸ் 2 மாணவர்கள் பள்ளி படிப்பை முடித்த பின் என்ன படிக்கலாம்? வாழ்க்கையில் முன்னேறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கும் கருத்தரங்கம் நடைபெற்றது.




கேரிங் ஹார்ட்ஸ் பவுன்டேஷன் நிறுவனர் டாக்டர் கிரேஸி தலைமையிலும், அறக்கட்டளையின் தலைவர் ஆர்.சி.ராஜசேகர் முன்னிலையிலும் நடைபெற்றகருத்தரங்கில் பாதிரியார் டாக்டர் இன்னாசிமுத்து, சமூக ஆர்வலர் ஜெயாபாபு ஆகியோர்கலந்துகொண்டு மாணவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கினர்.

இதுகுறித்து கேரிங் ஹார்ட்ஸ் பவுன்டேஷன் அறக்கட்டளையின் நிறுவனர்டாக்டர்கிரேஸி கூறியதாவது,

ஏழை, எளிய மாணவர்கள் கல்வியை எந்தவித தடங்களும் இல்லமால் கல்வியை தொடரவும், மாணவர்களுக்கு அரசு கொடுக்கும் சலுகைகள் கிடைக்கவும், அதற்கான வழிவகைகளை மாணவர்களுக்கு தெரிவிக்கவும், அரசு சலுகைகள் மாணவர்களுக்கு கிடைக்கும் வகையிலான பணிகளை செய்வதற்காகவும் இந்த அறக்கட்டளையை துவக்கியுள்ளோம்.

அதில் முதற்கட்டமாக இன்று மாணவர்களுக்கு பிளஸ் 2 முடித்த பின் என்ன படிக்கலாம்? வாழ்க்கையில் என்ன செய்யலாம் என ஆலோசனைகள் வழங்கியுள்ளோம்.

மேலும் விதவை பெண்கள், விவகாரத்தன பெண்கள் சொந்த தொழில் தொடங்க பயிற்சி அளித்து நிரந்தர வருமானம் பெற வழிவகைகளை செய்யும் பணியை எங்கள் அறக்கட்டளை மேற்கொள்ளும் என அவர் தெரிவித்தார்.

இந்த கருத்தரங்கில் சுமார் 300 க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு ஆலோசனைகள் அடங்கிய புத்தகமும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



மறைந்த அதிமுக அவைத் தலைவர் மதுசூதனனின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி அதிமுக வடசென்னை வடகிழக்கு மாவட்டம் சார்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. வடசென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் ஆர் எஸ் ராஜேஷ் தலைமையில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் வண்ணாரப்பேட்டை திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு மதுசூதனன் திருவுருவப்படத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாலகங்கா, வெங்கடேஷ் பாபு, மாவட்ட செயலாளர்கள் ஆர். எஸ் ராஜேஷ், தி. நகர் சத்தியா, விருகை ரவி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார் இதனையடுத்து பொதுமக்களுக்கு பொதுமக்களுக்கு அறுசுவை வெஜிடபிள் பிரியாணி மற்றும் காய்கறிகள் அடங்கிய தொகுப்பும் வழங்கினர்.

# விசலூர் ஊராட்சியில் புதிய மின்மாற்றி திறப்பு விழா



தரங்கம்பாடி, ஆக.6-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா விசலூர் ஊராட்சி பத்தம் கிராம விவசாயிகள், பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில்புதியமின்மாற்றி அமைத்து அதன் திறப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

திறப்பு விழாவில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு குறைந்தழுத்த புதிய மின்மாற்றி திறந்து வைத்து பேசினார்.

இதில்செம்பைதெற்கு ஒன்றியதிமுகசெயலாளர் எம்.அப்துல்மாலிக், மாவட்ட திமுக துணை செயலாளர் மு. ஞானவேலன், செம்பை ஒன்றிய துணைத் தலைவர் மைனர் பாஸ்கர், ஊராட்சிமன்ற தலைவர் அனுசுயா இளையராஜா, செயற்பொறியாளர் சந்தானகிருஷ்ணன், உதவிசெயற்பொறியாளர் பாலமுருகன், இளமின் பொறியாளர் கார்த்திக், ஆக்க முகவர் கலைச்செல்வன் மற்றும் திமுக நிர்வாகிகள் விசலூர் ஊராட்சிகிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம்,செய்யூர் வட்டம்,இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கூவத்தூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தில் மாவட்ட அளவில் சிறந்த கற்போர் மையமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதனை பாராட்டி மதுரையில் நடைபெற்ற மாநில எழுத்தறிவு விருது வழங்கும் விழாவில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் கூவத்தூர் அரசினர் மேல்நிலை பள்ளி தலைமையாசிரியர் அம்மையாரிடம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# தில்லையாடியில் கூரை வீடு எரிந்து சேதம் எம்எல்ஏ நிவேதா முருகன் நிவாரணம் வழங்கினார்





தரங்கம்பாடி, ஆக. 06:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, தில்லையாடி ஊராட்சி, வள்ளியம்மை நகர், ரயிலடி, நாவல் தோப்பு பகுதியில் வசிக்கும் உத்திராபதி-சுந்தரம்பாள் அவர்களின் கூரை வீடு திடீர் தீ விபத்தால் கூரை வீடு முழுவதும் எரிந்து வீட்டு உபகரணங்கள் சேதமடைந்தது. தகவல் அறிந்து வந்த பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம் முருகன் பாதிக்கப்பட்ட உத்ராவதி சுந்தரம்பால் ஆகியோரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி தனது சொந்தம் நிதியிலிருந்து ரூ 5000 மற்றும் அரிசி, மளிகைப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் வழங்கினார்.

இதில் செம்பை தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் எம்.அப்துல் மாலிக், செம்பை ஒன்றிய துணைத் தலைவர் மைனர் பாஸ்கர், ஊராட்சி மன்ற தலைவர் ரெங்கராஜன், மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்



திருவொற்றியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குப்பன் மகனும் மற்றும் ஏழாவது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் கார்த்திக் சகோதரருமான மாவட்ட மாணவரணி இணைசெயலாளர் மோகன்(38) கடந்த வாரம் 28 தேதி வெள்ளிக்கிழமை மாரடைப்பால் திடீரென்று உயிரிழந்தார் இந்நிலையில் ஒன்பதாவது நினைவு நாளான இன்று திருவொற்றியூர் அஜாக்ஸ் பேருந்து நிலையம் அருகே ஜீவன் லான் நகர் பகுதியில் உள்ள அவரது வீட்டில் மோகனின் திருவுருவப்படத்தை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி திறந்து வைத்தார் இதில் ஏராளமான அதிமுக நிர்வாகிகள் தொண்டர்கள் பங்கேற்றனர் பின்னர் குப்பனின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி புறப்பட்டு சென்றார்

# ஹரியாணாவில் தொடரும் புல்டோசர் நடவடிக்கை 3-வது நாளில் 20க்கும் மேற்பட்ட கடைகள் இடிப்பு

சண்டிகர், ஆக.6-

கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஹரியாணா மாநிலத்தின் நூ நகரில் மூன்றாவது நாளாக சனிக்கிழமையும் புல்டோசர்நடவடிக்கை தொடர்கிறது. ஒரே நாளில் 20-க்கும் மேற்பட்ட கடைகள் இடிக்கப்பட்டன.



ஹரியாணாமாநிலம் நூ மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை விஸ்வ இந்து பரிஷத் ஊர்வலத்தை தடுக்க முயன்றதால் ஏற்பட்ட மோதல், கலவரமாக மாறி, பக்கத்து மாவட்டங்களுக்கும் பரவியது. இதில் ஊர்க்காவல் படையை சேர்ந்த இருவர் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். வாகனங்கள், கடைகள், உணவகங்கள் உள்ளிட்ட சொத்துகள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

இதனையடுத்து நூ நகரில் இருந்து 20 கி.மீ. தொலைவில் டாரு என்ற இடத்தில் வசித்த புலம்பெயர்ந்த குடும்பங்களின் சுமார் 250 குடிசைகள் வெள்ளிக்கிழமை மாலையில் இடித்து அகற்றப்பட்டன. இது, அரசு நில ஆக்கிரமிப்பாளர்கள் மீதான நடவடிக்கை மட்டுமின்றி, கலவரக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கையாகவும் கருதப்படுகிறது.

முன்னதாக, ஹரியாணா முதல்வர் மனோகர் லால் கட்டார், ‘‘உ.பி.யில் யோகி ஆதித்யநாத் அரசு மேற்கொண்டு வருவதுபோல் ஹரியாணாவிலும் புல்டோசர்நடவடிக்கை எடுக்கப்படும்’’ என்று கூறியிருந்தார். இந்நிலையில், மூன்றாவது நாளான நேற்று பல்வேறு இடங்களில்புல்டோசர் நடவடிக்கை தொடர்ந்தது.

குறிப்பாக, ஷாஹீத் ஹசன் கான் மேவாதி அரசு மருத்துவக் கல்லூரி முன்னால் இருந்த பல கடைகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. கல்லூரியின் முன்பக்க வாயிலுக்கு எதிராக இருந்த கடைகள் இடிக்கப்பட்டன. இவை அனைத்தும் அதே பகுதியில் பல ஆண்டுகளாக அங்கேயே இருந்த கடைகள் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் புல்டோசர் நடவடிக்கை மாவட்ட நிர்வாகத்தின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடந்து வருகிறது. இதுவரை 50 முதல் 60 கட்டிடங்கள் இடிக்கப்பட்டுள்ளன.

காங்கிரஸ் சட்டமன்ற குழுவின் துணைத் தலைவரும், உள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான அஃப்தாப் அகமது கூறுகையில், "நூ மாவட்டத்தில் ஏழைகளின் வீடுகள் மட்டுமே அடித்து நொறுக்கப்படவில்லை. மக்களின் நம்பிக்கையும், சாமானியர்களின் வாழ்க்கையும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபர்கள் தங்களின் வீடுகளை இடிப்பது தொடர்பாக ஒரு மாதத்துக்கு முன்னரே நோட்டீஸ் கொடுத்துவிட்டது போல் முன் தேதியிட்ட நோட்டீஸ்களை கொடுத்துவிட்டு வீடுகளை இடித்துள்ளனர் என்று கூறுகின்றனர். அரசாங்கம் நிர்வாகத் தவறுகளை மூடி மறைக்க தவறான நடவடிக்கைகளை எடுத்துள்ளது" என்று ட்விட்டர் எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். கூடவே அவர் கட்டிடங்கள் இடிபடும் வீடியோவையும் பகிர்ந்துள்ளார்.

# தெற்காசிய உறைவாள் சண்டை போட்டியில் தங்கம் வென்ற தஞ்சை மாணவிக்கு சொந்த ஊரில் பாராட்டு

தஞ்சாவூர், ஆக.6-

தெற்காசிய அளவில் நடைபெற்ற 7-வது சாம்பியன்ஷிப் உறைவாள் சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற மாணவிக்கு சொந்த ஊரில் நேற்று கிராம மக்கள் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.




தஞ்சாவூர் அருகே சூரக்கோட்டையைச் சேர்ந்தவர் செல்வராஜ். இவரது மகள் எஸ்.தர்ஷினி (15). இவர் கும்பகோணத்தில் உள்ள தனியார் பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் உறைவாள் சண்டை விளையாட்டு போட்டியில் கடந்த 8 ஆண்டுகளாக பயிற்சி பெற்று, மாவட்ட, மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். இந்நிலையில் நேபாளம் நாட்டில் கடந்த பிப்ரவரி மாதம் தெற்கு ஆசிய அளவிலான உறைவாள் சண்டை போட்டிகள் நடைபெற்றது. இதில் இந்தியா, இலங்கை, நேபாளம், கொரியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர்.

இதில் இந்தியா சார்பில் 18 வயதுக்குட்பட்டோர் பிரில் பங்கேற்ற தர்ஷினி முதலிடம் பெற்று தங்க பதக்கம் பெற்றார். இதையடுத்து தர்ஷினி மலேசிய நாட்டில் 2023-2024 ம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய அளவிலான போட்டியில் விளையாட தகுதிபெற்றுள்ளார். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் முடிந்து கடந்த வாரம் அதற்கான முறைப்படியான சான்றிதழ்களும், பதக்கங்களும் அனுப்பி வைக்கப்பட்டது.

இதையடுத்து, தெற்கு ஆசிய அளவில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவி தர்ஷினிக்கு சொந்த ஊரான சூரக்கோட்டையில் பாராட்டு விழா கிராம மக்கள் சார்பில் நேற்று நடத்தப்பட்டது. விழாவுக்கு வந்தவர்களை தேசிய கபாடி பயிற்றுநரும், முன்னாள் தேசிய கபாடி வீரருமான ஜி.குலோத்துங்கன் வரவேற்றார். நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் கலைச்செல்வி பழனிமேகம் தலைமை வகித்தார்.

விழாவில் கிராம மக்கள் பலரும் மாணவியை பாராட்டினர். இதைத் தொடர்ந்து மாணவி தர்ஷினி 108 தென்னங் கன்றுகளையும், 1,000 பனைவிதைகளையும் நட்டு கிராமத்தை பசுமை நிறைந்த கிராமமாக மாற்றும் முயற்சியை தொடங்கி வைத்தார். பின்னர் கிராம மக்கள் பொது இடங்களில் தென்னங்கன்றுகள், பனை விதைகளை நடவு செய்தனர்.



தருமபுரி மாவட்டத்தில் காமராஜர் பிறந்த தினமான கல்வி வளர்ச்சி தினத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை கலெக்டர் சாந்தி கலெக்டர் அலுவலகத்தில் வழங்கினார். உடன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் குணசேகரன், மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மான்விழி ஆகியோர் உள்ளனர்.

# புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில் நூல்கள் வெளியீடு



புதுக்கோட்டை, ஆக.6–

புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில் எழுத்தாளர் பல்வேறு எழுத்தாளர்கள், கவிஞர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வருகிறது.6–ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவின் 9–ஆவது நாளான நேற்று (சனிக்கிழமை) காலை அமர்வில் எழுத்தாளர் விழியனின் 'மலைப்பூ' என்ற நூல் வெளியிடப்பட்டது. விழாவிற்குகவிஞர் மு.முருகேஷ் தலைமை வகித்து புத்தகத்தை வெளியிட்டார், முதல் பிரதிகளை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் உதய ரிஸ்னியா, வி.எஸ்.கவிசாகர், அ.அட்சயா, புதுக்கோட்டை ராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி பா.உ.தியானோ ஆகியோர் பெற்றுக்கொண்டதோடு நூல்குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடல் நிகழ்விலும் பங்கேற்றனர்.

நூலை அறிமுகம் செய்து கவிஞர் தங்கம்மூர்த்திபேசினார். புதிப்பாளர் நாகராஜன், மொழிபெயர்ப்பாளர் ராமேஷ் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். முன்னதாக அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் மு.முத்துக்குமார் வரவேற்க, நூலாசிரியர் விழியன் ஏற்புரை வழங்கினார். நூலை அறிவியல் இயக்க மாநிலச் செயலாளர் எஸ். டி.பாலகிருஷ்ணன் தொகுத்து வழங்கினார். புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்கள் ஆ.மணவாளன், கவிஞர் ஜீவி, கவிஞர் ராசி, பன்னீர்செல்வன், எம்.வீரமுத்து, க.சதாசிவம், கீதா, விமலா, பவுனம்மாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். வெள்ளிக்கிழமை மாலை நிகழ்வில் தன்னார்வ பயிலும் வட்டத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார் எழுதிய 'ஒரு ஆணின் பிரசவம்' என்ற நூலை கவிஞர் மதுக்கூர் ராமலிங்கம் வெளியிட, கவிஞர்கள் நா.முத்துநிலவன், ஜீவி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

# கோவை தம்பதியின் 3 வயது குழந்தைக்கு 'சாதி, மதம் இல்லை' என சான்று



கோவை , ஆக.6–

கோவையில் தங்கள் குழந்தைக்கு சாதி, மதம் இல்லை என ஒரு தம்பதியினர் வருவாய்த் துறையிடமிருந்து சான்று பெற்றுள்ளனர்.

கோவை பீளமேடு காந்திமாநகரைச் சேர்ந்தவர்கள் பீனா பிரீத்தி - பிரலோப் தம்பதியினர். இவர்களது மகள் பி.பீ. ஹாதியா (3). ஹாதியாவுக்கு சாதி, மதம் இல்லையென சான்று பெற விரும்பிய தம்பதியர், கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்து நேற்று (ஆக.8) சான்று பெற்றுள்ளனர். இது தொடர்பாக பீனா பிரீத்தி கூறியதாவது: "எல்லோரும் இந்தியர்கள் என்ற மனநிலை மட்டும் இருந்தால் போதும். எங்கள் மகளை சாதி, மதம் என எதை வைத்தும் பிரிக்க வேண்டாம் என முடிவு செய்தோம். இவ்வாறு சான்று பெறுவதால் வருங்காலத்தில் சாதி ரீதியான இடஒதுக்கீடு உள்ளிட்ட எதையும் எங்கள் குழந்தை பெற இயலாது என்று தெரிந்துதான் விண்ணப்பித்தோம்.

சான்று பெற விண்ணப்பித்து பெறுவதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டது. ஏன் இதை வாங்குகிறீர்கள் என நிறைய கேள்விகள் கேட்டனர். அதிகாரிகளுக்கு இவ்வாறு சான்று அளிப்பது குறித்து போதிய விழிப்புணர்வு இல்லை. இவ்வாறு வாங்க நினைத்தும் எப்படி பெறுவது என்றுகூட சிலருக்கு தெரியாமல் இருக்கலாம். இது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும், ஏற்கெனவே கடந்த 2013 ஜூன் 6-ம் தேதி தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநர் அலுவலகம் அனுப்பியுள்ள கடிதத்தில், "மாணவர்களை பள்ளியில் சேர்க்கும்போது சம்மந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர், பாதுகாவலர் விருப்பப்பட்டால் அந்த மாணவனின் பள்ளிச் சான்று, பள்ளி மாற்றுச் சான்றிதழ்களில் சாதியில்லை, மதமில்லை என்று குறிப்பிடவோ அல்லது அந்த வினாக்களுக்கு எதிரான இடத்தில் காலியாக விடவோ விரும்பினால், சம்பந்தப்பட்டவரின் விருப்பக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டு அவர்களின் விருப்பப்படியே சான்று வழங்கலாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு தலையாட்டி பொம்மை அல்ல அமித் ஷாவிற்கு மு.க. ஸ்டாலின் கண்டனம்

டெல்லி , ஆக.6–

மத்திய மாநில அலுவல் மொழிகள் குறித்த 38-வது பாராளுமன்ற கூட்டத் தொடர் வெள்ளிக்கிழமை டெல்லியில் நடைபெற்றது. இதில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கலந்து கொண்டு அவர் பேசியதாவது:- பிரதமர் நரேந்திர மோடி இந்தி மற்றும் பிற அனைத்து இந்திய மொழிகளையும் உலக அரங்கில் பெருமைப் படுத்தி வருகிறார். மாநில மொழிகளுடன் இந்தி போட்டியிடவில்லை. அனைத்து மாநில மொழிகளையும் வலுப்படுத்துவதன் மூலமாகவே நமது நாடு வலிமை அடையும். தமிழ், மராத்தி, குஜராத்தி ஆகிய மொழிகளுக்கு இந்தி மொழி போட்டியாக கொண்டு வருவதாக கூறப்படுவது தவறு. அலுவல் மொழியை ஏற்றுக் கொள்வதற்கான தேவையை நாம் உருவாக்க வேண்டும். அலுவல் மொழியை ஏற்றுக் கொள்வது சட்டம் மூலமாகவோ, சுற்றறிக்கை மூலமாகவோ இருக்கக் கூடாது.

அது நல்ல முயற்சியின் மூலமாக வரவேண்டும். பொறியியல் மற்றும் மருத்துவ படிப்புகளை பிரதான 10 மாநில மொழிகளில்



தொடங்குவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் இதற்கான பாடத்திட்டங்கள் வெளியாகும். பிரதமர் மோடி ஒருமுறை கூட பாராளுமன்றத்தில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தியதில்லை. மத்திய மந்திரிகளும் இந்திய மொழிகளில் உரை நிகழ்த்த முயற்சிக்கின்றனர். இது பல்வேறு மொழிகளை இணைக்கும் முயற்சிற்கு அதிக வேகத்தை அளிக்கிறது.

இந்திய மொழிகளும் அவற்றின் அகராதிகளும் ஆட்சி செய்த காலகட்டத்திற்குப் பிறகும் அப்படியே இருந்தன. இது ஒரு பெரிய சாதனை. மொழிகள் நாட்டை ஒன்றிணைக்க பாடுபட்டுள்ளன. மொழியின் மரியாதை இல்லாமல் பாரம்பரியத்தின் மரியாதை முழுமையடையாது. உள்ளூர் மொழிகளுக்கு அனைவரும் மரியாதை கொடுக்கும்போதுதான் அலுவல் மொழி ஏற்றுக்கொள்ளப்படும். அலுவல் மொழியின் வேகம் மெதுவாக இருந்தாலும் எந்தவித எதிர்ப்பும் இன்றி அதற்கு ஏற்புணர்வை வளர்க்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறி இருப்பதாவது:- எதிர்ப்பின்றி அனைவரும் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உள்துறை மந்திரி அமித்ஷாவின் பேச்சு மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்குக் கொத்தடிமை ஆக்கும் எதேச்சதிகார முயற்சியாகும். இதைக் கேட்டு நடக்க தமிழ்நாடு தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல. தமிழ்நாட்டுக்கு வந்தால் தொன்மையான மொழி என்று நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்குச் சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் பா.ஜ.க.வின் பசப்பு அரசியல் என்பதை அனைவரும் அறிவோம். இந்தித் திணிப்பை இப்போது மேற்கு வங்கம், கர்நாடகம் எனப் பல மாநிலங்களும் கடுமையாக எதிர்க்கத் தொடங்கி இருப்பதை மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா உணர வேண்டும். 1965 மொழிப்புரட்சிக் காலத்தை மீண்டும் உருவாக்கி விடாதீர்கள் என எச்சரிக்கிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# திருவரங்குளம் செவிலியர் பயிற்சி நிறுவனத்தில் உலக தாய்ப்பால் வார விழா கொண்டாட்டம்



திருவரங்குளம், ஆக.6–

திருவரங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவம் மற்றும் செவிலியர் பயிற்சி நிறுவனத்தில் உலக தாய்ப்பால் வார விழா கொண்டாடப்பட்டது. மரக்கன்றுகள் நடப்பட்டு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சிக்கு வட்டார மருத்துவ அலுவலர் ராம்சுந்தர் தலைமை தாங்கினார்.

திருவரங்குளம் மருத்துவப்பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தார், ஆண்டுதோறும் ஆகஸ்ட் முதல் வாரம் உலக தாய்ப்பால் வார விழா அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பச்சிளங்குழந்தைகளின் இறப்பை குறைக்கவும் குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு தாய்ப்பாலின் அவசியம் அதன் மகத்துவம் குறித்தும் ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொண்டாடப்பட்ட இந்த நிகழ்ச்சியில்

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி சமூக மருத்துவம் மற்றும் நோய்த்தடுப்புத்துறையை சேர்ந்த மருத்துவர் கே.சரவணன் தாய்பாலின் மகத்துவம் குறித்து பேசும்போது,

குழந்தை பிறந்து 1 மணி நேரத்திற்குள் தாய்ப்பால் கொடுக்கவேண்டும் முதல் ஆறு மாதங்கள் தாய் பால் தவிர வேறு எந்த உணவும் குழந்தைக்கு கொடுக்கக்கூடாது குழந்தைக்கு தாய்பாலே முதல் உணவு முக்கிய உணவு சுத்தமான சத்தான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவு என்பதை தாய்மார்களுக்கு விளக்கி கூறினார் .

தாய்ப்பால் கொடுக்கும்போது என்னென்ன ஊட்டச்சத்து உணவுகளை சாப்பிட வேண்டும் தாய்பால் வங்கியின் சிறப்பு மற்றும் பேருந்து நிலையம் போன்ற பொது இடங்களில் பாலூட்டும் அறைகளை தாய்மார்கள் பயன்படுத்துவது தாய்பால் கொடுப்பதால் பெண்களின் அழகு குறைவதில்லை போன்ற பல விழிப்புணர்வு தகவல்கள் நிகழ்ச்சியில் எடுத்துக்கூறப்பட்டது.

இந்த அரங்கில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில் தாய்மார்கள் சாப்பிட வேண்டிய ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் பழங்கள் காய்கறிகள் காட்சிக்காக வைக்கப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தாய்மார்களுக்கு புதுக்கோட்டை பேலஸ் ரோட்டரி சங்கத்தலைவர் பாஸ்கரன் மாதுளை ஆரஞ்சு உள்ளிட்ட பழங்கள் அடங்கிய பையினை 25 தாய்மார்களுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மரு.கௌரிசங்கர், மரு. சந்திரசேகர் கவியரசன் திருவரங்குளம் பயிற்சி செவிலியர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மணிப்பூர், ஹரியாணாவில் கலவரம் மூலம் அரசியல் ஆதாயம் தேடுகிறது பாஜக: முத்தரசன்



*கும்பகோணம் , ஆக.6–*

*"2024-ம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல், ஜனநாயக முறைப்படி நடக்குமேயானால் இண்டியா கூட்டணி மகத்தான வெற்றி பெறும்" என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.*

*கும்பகோணத்துக்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்த முத்தரசன் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், "2024-ம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத்தேர்தலில் பாஜக நிச்சயமாக தோற்போம் என்ற முடிவுக்கு வந்துவிட்ட காரணத்தால், தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் போக்கினை மேற்கொண்டு வருகிறார்கள். இதற்கு அமலாக்கத் துறை, வருமான வரித் துறை போன்ற மற்றதுறைகளை மிகவும் தவறான முறையில் பயன்படுத்தி வருகின்றனர். தேர்தல் வாக்குறுதிகளை பாஜக நிறைவேற்றவில்லை என்பதை மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.*

*பாஜக தங்களது தோல்விகளை மறைப்பதற்காக மணிப்பூர், ஹரியாணா போன்ற மாநிலங்களில் கலவரங்களை உருவாக்கி, அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடலாம் என்ற குறுகிய நோக்கத்துடன் செயல்படுகிறார்கள். பிரதமர் நாடாளுமன்றத்திற்கு வர மறுக்கின்றார். இதைக் காட்டிலும் ஜனநாயக சீர்கேடு வேறு எதுவும் இருக்க முடியாது.*

*இந்தநாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் மோடி இந்த நாட்டினுடைய நாடாளுமன்றத்திற்கு வரமாட்டார். ஆனால், அந்நிய நாட்டினுடைய நாடாளுமன்றத்தில் சிங்கம்போல் கர்ஜிப்பார். இதிலிருந்து மோடியும், அவரது கட்சியினர் தவறாகக் கொள்கையை பின்பற்றுகிறார்கள் என்பது தெரிகிறது. 2024-ம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடக்குமேயானால் இண்டியா கூட்டணி மகத்தான வெற்றி பெறும். பாஜக தோற்கும்" எனத் தெரிவித்தார்.*

# சங்கரன்கோவிலில் ரூ.2 கோடி மதிப்பில் பாலம் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி

## வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ அடிக்கல் நாட்டினார்



சங்கரன்கோவில். ஆக.6–

சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேலநீலிதநல்லூர் ஒன்றியத்தில் கீழநீலிதநல்லூர் முதல் மருதன்கிணறு வரை செல்லும் சாலையில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ. 2கோடி மதிப்பில் பாலத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பெரியதுரை தலைமை வகித்தார், இதில் தென்காசி திமுக வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு பாலம் கட்டும் பணியை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். இதில் சங்கரன்கோவில் நகரச் செயலாளர் பிரகாஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், ஊராட்சி மன்றத் தலைவர் தங்கதுரை, ஒன்றிய கவுன்சிலர் நாகராஜன், முத்தரசு ,மாரியப்பன் ,சுவாமிதாஸ், பாபு, பொறியாளர் அணி மாதவன், இளைஞர் அணி ரமேஷ், ஒப்பந்தக்காரர் மாரியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இடையங்கோட்டை முத்துமாரியம்மன் திருக்கோயில் திருவிளக்கு பூஜையில் 500க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்



அறந்தாங்கி,ஆக.6–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே இடையங்கோட்டை முத்துமாரியம்மன் திருக்கோயில் ஆடிவெள்ளியை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நடைபெற்றது

உலக அமைதி,தொழில் வளர்ச்சி மக்களுக்கு செல்வங்கள் கிடைக்க வேண்டியும் சுமங்கலிபாக்கியம் திருமணவரன், குழந்தைவரன் வேண்டியும் திருவிளக்கு பூஜை நடைபெற்றது. முன்னதாக முத்துமாரி அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை அலங்காரம் மற்றும் தீபாராதனை நடந்தது. திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்ட பெண்கள் உலக அமைதி வேண்டியும்,சுமங்கலிபாக்கியம்,திருமணவரன், குழந்தைவரன், வேண்டியும் பெண்கள் தலை வாழை இலையில் குத்துவிளக்கு ஏற்றி வைத்து மஞ்சள், குங்குமம், பூ உள்ளிட்டவற்றால் விளக்கு பூஜை செய்தனர்.

தொடர்ந்து மஞ்சள், பூ, பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு வைத்து வழிபட்டனர். சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட முத்துமாரி அம்மனுக்கு வழிபாடு செய்யப்பட்டு அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

திருவிளக்கு பூஜையில் இடையங்கோட்டை, சீனமங்கலம், வீரராகவபுரம், திட்டக்குடி உள்ளிட்ட சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

## அறந்தாங்கி அருகே அரசுப்பேருந்தில்

# தவறி விழுந்த மாணவியை நேரில் சென்று ஆறுதல் கூறிய அறந்தாங்கி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்



அறந்தாங்கி,ஆக.6–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே நாகுடி பகுதியைச்சேர்ந்தவர் ஹர்ஷினி இவர் சுப்பிரமணியபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படித்து வரும் நிலையில் கடந்த செவ்வாய்கிழமை அரசு பேருந்தில் பள்ளிக்கு சென்றபோது கூட்ட நெரிசலால் தவறி விழுந்து காலில் படுகாயம் அடைந்தார்.

இந்நிலையில் மாணவி மீட்கப்பட்டு அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். காலை மற்றும் மாலை நேரத்தில் பள்ளி செல்லும் நேரத்தில் கூடுதல் பேருந்து இயக்க மாணவர்களின் பெற்றோர்கள் அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தனர். இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 12-ஆம் வகுப்பு மாணவி ஹர்ஷினியை அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதோடு காலை நேரத்தில் அரசு பேருந்து கூடுதலாக இயக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார், தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர் ஆவுடையார்கோவில் முதல் நாகுடி வரை ஏற்கனவே இயங்கிய அரசுப்பேருந்தை காலை மற்றும் மாலை நேரங்களில் கூடுதலாக இயங்க போக்குவரத்து அமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும், பாஜகதலைவர் அண்ணாமலை முக்கால் கிலோ மீட்டர் மட்டுமே நடப்பவர் முக்கால் கிலோ மீட்டர் நடந்துவிட்டு காரில் ஏறி செல்பவர்தான் அவர் நாங்கள் ஒவ்வொரு நாளும் தொகுதிக்குள் பல கிலோ மீட்டர் நடக்கிறோம், அண்ணாமலை நடை பயணத்தால் எந்த மாற்றமும் வராது, சமீபத்தில் அறந்தாங்கி வந்த அண்ணாமலை நாங்கள் தொகுதிக்கு எதுவும் செய்யவில்லை என தெரிவித்துள்ளாராம்-அப்பாவும் நானும் தொகுதிக்குள் என்ன செய்துள்ளோம் என அவருக்கு எதுவும் தெரியாது பாவம் விட்டுவிடுங்கள் என்று கூறினார்

# 2015 முதல் 2019 வரை 30% நக்சல் தாக்குதல்கள் குறைந்துள்ளன அமித் ஷா

புவனேஸ்வர் , ஆக.6–

கடந்த 2015 முதல் 2019 வரையிலான காலக்கட்டத்தில் நக்சல் தாக்குதல்கள் 30 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஒடிசாவில் பல்வேறு திட்டங்களை தொடங்கிவைக்கும் நிகழ்ச்சியில் அமித் ஷா பங்கேற்றார். மாநில முதல்வர் நவீன் பட்நாயக், மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய அமித் ஷா, "கடந்த 2015 முதல் 2019 வரையிலான காலக்கட்டத்தில் நக்சல் தாக்குதல்கள் 30 சதவீதம் குறைந்துள்ளன. காவல் துறை சார்பில் நடத்தப்படும் என்கவுன்டர்கள் 32 சதவீதம் குறைந்துள்ளன. பாதுகாப்புப் படையினரின் உயிரிழப்பு 56 சதவீதம் குறைந்துள்ளது.

நக்சலிசத்துக்கு எதிரான போராட்டத்தில் பாஜக தலைமையிலான மத்திய அரசு உறுதியாக இருக்கிறது. இந்தப் போராட்டத்துக்கு ஒடிசா மாநில அரசு சிறப்பான ஒத்துழைப்பை அளித்துள்ளது. அதற்காக மாநில அரசுக்கு நன்றி. தேசிய நெடுஞ்சாலை 200-ல் காமாக்யா நகர் முதல் துபுரி வரையிலான 51 கிலோ மீட்டர் தொலைவு நெடுஞ்சாலை ரூ.761 கோடி மதிப்பீட்டில் 4 வழிச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இதை நாட்டுக்கு அர்ப்பணிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்




தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவது என்பது நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. கடந்த 9 ஆண்டுகளில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பை வலுப்படுத்தாமல் நாட்டை முன்னேற்ற முடியாது என்பதில் பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார். கடந்த 2014-15-ம் வருடத்தில் நாளொன்றுக்கு 12 கிலோ மீட்டர் தொலைவு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. 2021-22-ல் இது 29 கிலோ மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான முந்தைய அரசு 2014-ல் மாநிலங்களுக்கு வழங்கிய நிதி ரூ.1.14 லட்சம் கோடி. பாஜக தலைமையிலான தற்போதைய அரசு கொடுத்துள்ள நிதி ரூ.4.57 லட்சம் கோடி. பேரிடர் ஒரு மிகப் பெரிய பிரச்சினை. பேரிடர் மேலாண்மைக்காக மத்திய அரசு எடுத்துள்ள அனைத்து முயற்சிகளையும் ஒடிசா அரசு சிறப்பாக களத்தில் நடைமுறைப்படுத்தி உள்ளது.

மத்திய அரசுடன் மாநில அரசு இணைந்து செயல்பட்டால் எவ்வாறு பேரிடர்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம் என்பதற்கு ஒடிசா மிகச் சிறந்த உதாரணம். அதற்காக முதல்வர் நவீன் பட்நாயக்கிற்கு வாழ்த்து தெரிவிக்கிறேன். கடந்த காலங்களில் ஒடிசா புயல்களால் அதிகம் பாதிக்கப்படும். ஒவ்வொரு முறையும் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழப்பார்கள். ஆனால், தற்போது ஒருவர்கூட உயிரிழக்கும் நிலை என்பது இல்லை" என்று தெரிவித்தார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# இந்தியாவில் கடந்த காலங்களை விட 30% நக்சல் தாக்குதல்கள் குறைந்துள்ளன

# எடுக்கும் முயற்சிகளில் தொடர் தோல்வி திமுக மீது பாஜகவுக்கு கோபம்





# மணிப்பூர் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் அரசியல் செய்கின்றன

சென்னை / புதுக்கோட்டை | 06.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கே. எஸ். கோதண்டராமய்யா , ஆந்திரா அரசியல்வாதி (பி.1909) (இ.1984)



ஜி சியான்லின் , இந்திய சீன மொழியியல் அறிஞர் (பி.1911) (இ.2009)



அ. சீனிவாசன் , தமிழக இதழாளர், மொழிபெயர்ப்பாளர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1925)



ராஜேந்திர சிங் , இந்திய சூழலியலாளர் (பி.1959)



## இன்றைய நினைவு நாள்

சுரேந்திரநாத் பானர்ஜி , இந்திய அரசியல்வாதி (பி.1845) (இ.1925)



ருக்மிணி லட்சுமிபதி, இந்திய அரசியல்வாதி, சென்னை மாகாண முதல் பெண் அமைச்சர் (பி.1892) (இ.1951)



ஆழிக்குமரன் ஆனந்தன் , இலங்கையின் நீச்சல் வீரர், வழக்கறிஞர் (இ.1984)

